அடையாள இலக்கம்:

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2014

அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition – Australian Society of Graduate Tamils

# எழுத்தறிவுப் போட்டி

# மேற் பிரிவு

(10 – 11 வயதுப் பிரிவு)

நேரம்: 1 மணி 30 நிமிடம்

பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிகமாக 10 நிமிடங்கள் வழங்கப்படும்.

| | |
|---|---|
| மொத்தப் புள்ளிகள் | |

(1). **பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.** புள்ளிகள்: 5

1. அன்பில்லை ______________ + ______________
2. மருத்துப்பை ______________ + ______________
3. பொற்காப்பு ______________ + ______________
4. மாமரம் ______________ + ______________
5. பொருட்காட்சி ______________ + ______________

(2). **பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.** புள்ளிகள்: 5

1. வாழை + பழம் = ______________
2. புளி + சோறு = ______________
3. ஆறு + மணல் = ______________
4. வயிறு + நோய் = ______________
5. தாழை + பூ = ______________

(3) **பின்வரும் சொற்களுக்கு எதிர்ப் பொருள் கொண்ட சொற்களை எழுதுக.** புள்ளிகள்: 5

1) அறம் ______________
2) இகழ்ச்சி ______________
3) ஒருமை ______________
4) மூப்பு ______________
5) புதுமை ______________

(4) **பின்வரும் சொற்களின் உயர்திணைப் பெண்பாற்ச் சொற்களை எழுதுக** புள்ளிகள்: 5

1) மணமகன் ______________
2) இறைவன் ______________
3) உபாத்தியாயன் ______________
4) தமையன் ______________
5) ஆண்டான் ______________

| புள்ளிகள் | |
|---|---|

**(5) அடைப்புக் குறிக்குள் இருந்து பொருத்தமான சொற்களைத் தேர்ந்தெடுத்துக் கீழே தரப்பட்ட வசனங்களிற் காணப்படும் கோடிட்ட இடங்களை நிரப்புக.** 10 புள்ளிகள்

1) அமைச்சர் தொலைக்காட்சியில் ________________ நிகழ்த்தினார்.

(உரை, உறை)

2) கடலிலே சென்ற கப்பல் ________________யில் மோதி உடைந்தது.

(பாரை, பாறை)

3) மயில் ஒரு அழகான ________________.

(பறவை, பரவை)

4) எனது அம்மா ஆசிரியராக ________________ செய்கிறார்.

(வேலை, வேளை)

5) நான் வளர்க்கும் நாயின் ________________ வளைந்து இருக்கிறது.

(வாள், வால்)

6) கடுமையாகப் பெய்த மழையினால் ஏற்பட்ட ________________ பயிர்களை அழித்தது.

(வெல்லம், வெள்ளம்)

7) மாதினி பயந்த ________________ கொண்டவள்.

(தண்மை, தன்மை)

8) அந்தச் சட்டையின் ________________என்ன?

(விலை, விளை)

9) ________________ஒரு சத்துள்ள தானியம்.

(திணை, தினை)

10) மழை பொழியும் பொழுது ____________ கருமையாகக் காணப்படும்.

(வானம், வாணம்)

| புள்ளிகள் | |
|---|---|

**(6) கீழே தரப்பட்ட சொற்களுக்கு அவற்றின் பொருள் விளங்கும்படி வாக்கியங்கள் எழுதுக.** புள்ளிகள்: 20

1. தினந்தோறும்: ----------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------------------------------

2. முன்னோர்கள்: -------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------------------------------

3. கலந்துரையாடல்: -------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------------------------------

4. தமிழ் மொழி: ---------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------------------------------

5. பூங்கா: -----------------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------------------------------

6. புலமைப் பரிசு: -----------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------------------------------

7. பழமொழிகள்: ------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------------------------------

8. சமையல்: --------------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------------------------------

9. மன்னன்: --------------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------------------------------

10. வெற்றி: --------------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------------------------------

| புள்ளிகள் | |
|---|---|

## பகுதி: 2

7) **கோடிட்ட இடங்களிலே பொருத்தமான சொற்களைப் பாவித்துக் கீழே தரப்பட்ட வாக்கியங்களைப் பூர்த்தி செய்க:** புள்ளிகள்: 20

1. புலம்பெயர்ந்தாலும் தமிழ் மக்கள் தங்களுடைய கலாசாரத்தைக் ------------------------------------------------ வரவேண்டும்.
2. உயிர் வாழ்வதற்குச் சத்தான உணவோடு போதிய ----------------------------- அருந்தவேண்டும்.
3. அண்மையிலே சீனாவிற்குச் சென்றுகொண்டிருந்த ஒரு மலேசிய --------------------------- காணாமற் போய்விட்டது.
4. சிலப்பதிகாரம் என்னும் காப்பியம் இளங்கோவடிகளால் ---------------------------------.
5. முழுமையாக நடனம் பயின்ற மாணவியின் ----------------------------- அண்மையிற் சிறப்பாக நடந்தேறியது.
6. வீட்டிற்கு வரும் விருந்தினர்களை ------------------------வரவேற்க வேண்டும்.
7. 'இளமையிற் கல்வி ---------------------------------- எழுத்து''.
8. பல மாதங்கள் மழை ----------------------------------- எங்கும் வறட்சி காணப்பட்டது.
9. தமிழனாக வாழவேண்டும் என்றால் நாம் எமது -------------------------------ப் பாதுகாக்கவேண்டும்.
10. பட்டதாரிகள் சங்கம் நடத்தும் தமிழ்ப் போட்டிகள் தமிழைப் படிக்க எங்களுக்கு -------------------------------- தருகிறது.

| புள்ளிகள் | |
|---|---|

## பகுதி 2

**(8) கீழே தரப்பட்ட சொற்களிலிருந்து பொருத்தமான சொற்களாற் பந்தியில் உள்ள இடைவெளிகளை நிரப்புக.** புள்ளிகள்: 10

மருத்துவம் ஒரு புனிதமான தொழில். மருத்துவராகத் ____________________ ஒருவர் மருத்துவக் கல்லூரியிற் படித்துப் பட்டம் பெற்றிருக்க வேண்டும். பள்ளியில் உயர்நிலைக் கல்விச் சான்றிதழ் தேர்வில் மிகச் சிறப்பாகத் தேர்ச்சி அடைந்த மாணவர்களுக்கு மட்டுமே மருத்துவக் ________________________ வாய்ப்பு வழங்கப்படுகின்றது.

மருத்துவம் பயிலும் மாணவர்கள் மனிதர்களுக்கு ஏற்படும் சகல விதமான நோய்களைப்பற்றியும் கற்றுத் ______________________ இருப்பார்கள். மருத்துவம் கற்றுத் தேர்ச்சி பெற்றவர்களிற் சிலர் கண், காது, பல், எலும்பு, இருதயம், மூளை போன்றவற்றில் ஏற்படும் நோய்கள் பற்றிய எல்லா விடயங்களையும் பற்றிய விசேட படிப்பு ______________________ அவற்றிலே தனித்துறை நிபுணராகப் பட்டம் ______________________. மருத்துவத் __________________________ மற்றத் தொழில்களைப் போன்றதல்ல. மனிதனின் பிறப்பு முதல் __________________________ எவ்வகை நோய்க்கும் சிகிச்சை அளித்து எம்மைக் குணமாக்கும் ___________________________ தெய்வங்களாக மருத்துவர்கள் விளங்குகிறார்கள். நவீன விஞ்ஞானத்தின் கண்டுபிடிப்புகள் பல வித ___________________________மேற்கொள்ள உதவிசெய்கின்றன. மற்றைய தொழில்களுக்கு இல்லாத _________________________ மருத்துவத் தொழிலுக்கு இருக்கின்றது.

| | | |
|---|---|---|
| 1. மேற்கொண்டு | 2. தொழில் | 3. தேர்ந்து |
| 4. கல்விகற்கும் | 5. தொழில் செய்ய | 6. பெறுவார்கள் |
| 7. தனிச்சிறப்பு | 8. இறப்பு வரை | 9. நடமாடும் |
| 10. சிகிச்சைகள் | | |

| புள்ளிகள் | |
|---|---|

**(9) கீழே தரப்பட்ட கவிதைகளைப் படித்த பின்னர் கேட்கப்பட்ட கேள்விகளுக்குத் தகுந்த விடைகளைத் தருக.** புள்ளிகள்: 20

ஓடி விளையாடு பாப்பா – நீ
  ஓய்ந்திருக்க லாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா
  ஒரு குழந்தையை வையாதே பாப்பா.

பொய் சொல்லக் கூடாது பாப்பா – என்றும்
  புறஞ் சொல்லல் ஆகாது பாப்பா
தெய்வம் நமக்குத் துணை பாப்பா - ஒரு
  தீங்குவர மாட்டாது பாப்பா.

தமிழ்த் திரு நாடு தன்னைப் - பெற்ற
  தாயென்று கும்பிடடி பாப்பா
அமிழ்தில் இனியதடி பாப்பா – எங்கள்
  ஆன்றோர்கள் தேசமடி பாப்பா.

கேள்விகள்

1) எப்படிக் குழந்தைகள் இருக்கவேண்டும் என்று புலவர் பாடுகிறார்?

--------------------------------------------------------------------------------
--------------------------------------------------------------------------------
--------------------------------------------------------------------------------

2) எவற்றைச் செய்யக் கூடாது என்று இந்தப் பாடல்களிலே சொல்லப்பட்டுள்ளது?

--------------------------------------------------------------------------------
--------------------------------------------------------------------------------
--------------------------------------------------------------------------------

3) தமிழ் நாட்டைத் தந்த தேசத்தை எப்படி வணங்கச் சொல்கிறார்?

--------------------------------------------------------------------------------
--------------------------------------------------------------------------------
--------------------------------------------------------------------------------

4) எங்கள் தேசத்தைப் புலவர் எதற்கு ஒப்பிடுகிறார்?

--------------------------------------------------------------------------------
--------------------------------------------------------------------------------
--------------------------------------------------------------------------------



| புள்ளிகள் | |
|---|---|